# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

105 - 5th Lane, Colomo - 03, Sri Lanka
Tel: +94 11 2564404, Fax: +94 11 4722632
E-mail: cmev@cpalanka.org Website: http://cmev.wordpress.com

## தென்மாகாண சபைத் தேர்தல் - 2009

### ஊடக அறிக்கை இல - 05

### 2009 – ஒக்டோம்பர் 06

**06 ஒக்டோபர், 2009 கொழும்பு இலங்கை** தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) இதுவரையில் 73 தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களை உறுதிப்படுத்தியுள்ளது. இவற்றுள் 19 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாகவும் 54 சம்பவங்கள் பாரியதற்ற வன்முறைச் சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கூடுதலான வன்முறைச் சம்பவங்கள் காலி மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற 19 பாரிய வன்முறைச் சம்பவங்களுள் 11 வன்முறைச் சம்பவங்கள் இம்மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்படுகின்ற அதே வேளை மொத்தமாக கிடைக்கப்பெற்றுள்ள 73 சம்பவங்களுள் 29 சம்பவங்கள் காலி மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 28 வன்முறைச் சம்பவங்களை அம்பந்தோட்டை மாவட்டத்திலிருந்தும் 16 வன்முறைச் சம்பவங்களை மாத்தறை மாவட்டத்திலிருந்தும் இதுவரையில் பதிவுசெய்துள்ளது.

**மாத்தறை கம்புறுபிட்டியவில் ஐ.தே.க வேட்பாளர் மீது தாக்குதல்**

06ம் திகதி அதிகாலை 01.00 மணியளவில் ஐ.தே.க வேட்பாளர் திரு. உதய திஸாநாயக்க (வேட்பாளர் இலக்கம் 09) இனம்தெரியாத குழுவொன்றினால் மாத்தறை தலுகல பாலத்திற்கருகாமையில் வைத்து தாக்கப்பட்டு பின்னர் மாத்தறை பொது வைத்தியசாலை வாட்டிலக்கம் 03 இல் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) திரு. திஸாநாயக்க அவர்களை தொடர்புகொண்டபொழுது தான் திகொடவில் அமைந்துள்ள தனது உறவினர் ஒருவரின் வீட்டிற்கு தனது முச்சக்கரவண்டியில் (200-2429) சென்று கொண்டிருந்த வேளை இரண்டு 'டிபென்டர்' வண்டிகளில் வந்த இனந்தெரியாத குழுவினரால் வழிமறைக்கப்பட்டு தடிகளால் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டார். அத்துடன் தனது முச்சக்கரவண்டியை சேதப்படுத்தியதாகவும் குறிப்பிட்டார். மேலும், துப்பாக்கியொன்றை காட்டி தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என அச்சுறுத்தியதாகவும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) தெரிவித்தார். வந்த 2 வண்டிகளில் ஒரு வண்டியின் இலக்கத்தை (WP KB 1927) என அடையாளம் கண்டதாகவும் குறிப்பிட்டார்.

திஹகொட பொலிஸ் நிலைய அதிகாரி திரு. டி.சன்தன அமரரத்ன மேற்குறிப்பிட்ட சம்பவத்தை உறுதிப்படுத்தியதுடன் திரு. திஸாநாயக்க மற்றும் அவரது சாரதியிடமிருந்து வாக்குமூலங்களை (EIB /31/51) பதிவுசெய்துள்ளதாகவும் குறிப்பிட்டார். பொலிஸ் அறிக்கைகளின் படி முச்சக்கரவண்டியின் முன் கண்ணாடி (Windscreen) மற்றும் அதில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 03 பதாகைகள் என்பன வன்முறையாளர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அடையாளம் காணப்பட்ட வண்டியின் இலக்கம் போக்குவரத்து திணைக்களத்திற்கு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக வேண்டி அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் திஹகொட பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஒக்டோபர் 06 ம் திகதி தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) கள கண்காணிப்பாளர் மாத்தறை பொது வைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டு தாக்குதலுக்குள்ளானவரிடமிருந்து வாக்குமூலம் ஒன்றை பதிவுசெய்துள்ளார். மேலும் சிகிச்சைகளின் பின்னர் இன்று மதியம் திரு. திஸாநாயக்க வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

**அம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராமையில் ஜே.வி.பி. காரியாலயம் மீது தாக்குதல்**

05 திகதி ஒக்டோபர் 2009 அதிகாலை 3.30 மணியளவில் திஸ்ஸமஹாராம தெபரவெவயில் அமைந்துள்ள ஜே.வி.பி. வேட்பாளர், திரு. எல்.கே. சுஜீவ பிரியங்க (வேட்பாளர் இலக்கம் 03) அவர்களின் காரியாலயம் குற்றம் சுமத்தப்பட்டுள்ளபடி ஐ.தே.சு.மு. ஆதரவாளர் குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடந்த இடத்திற்கு தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக திரு. எல்.கே. சுஜீவ பிரியங்கவை தொடர்புகொண்ட பொழுது திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பான முறைப்பாடொன்றை (IIB 96/6) மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். திஸ்ஸமஹாராமை பொலிஸ் நிலைய அதிகாரி திரு. ஜி.விஜயசேகர இச்சம்பவம் தொடர்பில் வழக்கொன்று (BR 755/2009) தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் மேலதிக விசாரணை நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

தென்மாகாணத்தின் 03 மாவட்டங்களிலும் தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருவதனை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. நிலவுகின்ற பதட்ட சூழ்நிலைகள் தொடர்பாகவும் வாக்களிப்பில் இச் சூழல் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் தொடர்பாகவும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. எனவே, அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிசார் என்போரை தென்மாகாணத்தில் நீதி மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குரிய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தடையற்ற சுதந்திரமான வாக்களிப்பை தேர்தல் தினத்தில் உறுதிசெய்யுமாறும் அழைப்புவிடுக்கிறது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 1997 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் INFORM மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஒன்றியமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் செயலகமாக செயற்படுகின்றது.

துசித்த சிறிவர்தன (சட்டத்தரணி)
தேசிய இணைப்பாளர்.